

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் மேற்கு ஒன்றியம் எதப்பட்டு, கரடிகுப்பம், மேல் வயலாமூர் ஆகிய ஊராட்சிகளில் துணை முதல்வர் பிறந்தநாள் விழா, திராவிடப் பொங்கலை முன்னிட்டு 5000 குடும்ப அட்டைதார்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அரிசி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், மாவட்டக் கவுன்சிலர் செல்வி ராமசரவணன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.



வேலூர் வடக்கு மாவட்டம் கே.வி.குப்பம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அரும்பாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர், டி..எம்.கதிர் ஆனந்த் பங்கேற்று அப்பகுதியில் மேற்கொள்ளப் பட்டுள்ள பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் குறித்து விளக்கிய பின் மக்களின் கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தார். உடன் ஒன்றியகுழு தலைவர் லோ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.சீதாராமன், இரா.முருகேசன், ஊராட்சிமன்ற தலைவர் சிவக்குமார், ஒன்றிய கழக நிர்வாகிகள், அரசுத்துறை அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### கூட்டணிக் கட்சியினர் தொடர்பான கருத்துகளை

# கழக நிர்வாகிகள் பொது வெளியில் விவாதிப்பதைத் தவிர்த்திடுவீர்!

## கழக அமைப்புச் செ.யலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிவுறுத்தல்!

சென்னை, ஜன.29-

கூட்டணி, தொகுதிப் பங்கீடு மற்றும் கூட்டணிக்கட்சி யினர் தொடர்பான கருத்துகளை கழக நிர்வாகிகள் பொதுவெளியில் விவாதிப்பதை முழுமையாகத் தவிர்த்திட வேண்டும் என கழக அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிவுறுத்தியுள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

கூட்டணி, தொகுதிப் பங்கீடு மற்றும் கூட்டணிக்கட்சியினர் தொடர்பான கருத்துகளை கழக நிர்வாகிகள் பொதுவெளியில் விவாதிப்பதை முழுமையாகத் தவிர்த்திட வேண்டும். தேவையற்ற சர்ச்சைகளினால் எவ்விதப் பலனும் இல்லை என்பதால் ஆக்கப்பூர்வமான கட்சிப் பணிகளில் கவனம் செலுத்தி தேர்தல் வெற்றியை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட வேண்டும். கூட்டணி தொடர்பான முடிவுகளை கழகத்தலைவர் அவர்கள் உரிய நேரத்தில் அறிவிப்பார்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிவித்துள்ளார்.

# கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் (31.01.2026 - சனிக்கிழமை) மதியம் 02.00 மணியளவில் குறிஞ்சிப்பாடி அலுவலகத்தில், கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் இக்கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமைக் கழக சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், கடலூர் கிழக்கு மாவட்டக் கழக தொகுதி பார்வையாளர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட, மாநகர கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாநகர மேயர், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:-

1. பிப்ரவரி 1- ஆம் தேதி முதல் தொடங்கி மார்ச் 8- ஆம் தேதி வரை வெல்லும் தமிழ்ப்பெண்கள் மகளிர் பரப்புரை.
2. பிப்ரவரி 1- ஆம் தேதி அன்று கடலூர் மாவட்டத்திற்கு வருகை தரும் தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு கூட்டம்.
3. 11.02.2026 அன்று நடைபெறும் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி, வாக்குச்சாவடிக் குழுவினருக்கான பயிற்சி மாநாடு.
4. தமிழ்நாடு தலைகுனியாது தொகுதி பரப்புரை பொதுக்கூட்டங்கள்.
5. கழக தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா.
6. 08.03.2026 அன்று நடைபெறும் ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும் மாநில மாநாடு.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**

செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.



திருப்பத்தூர் மாவட்டம் கெஜல்நாயக்கன்பட்டியில் அமைந்துள்ள இ.வெ.நா. ஆண்கள் அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் பெண்கள் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை மாவட்டச் செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் கந்திலி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.கே.டி.அசோக்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வடிவேல் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றியம், கீழூர் ஊராட்சியில் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாள் விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன், 2000க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றியச் செயலாளர் அ.குணசேகரன், மாவட்டப் பிரதிநிதி வெங்கடேசன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பாக்கியராஜ், துணை அமைப்பாளர் கோபு, வைரமணி, தங்கராசு, சிவராமன், பாஸ்கர், சொக்கலிங்கம், உமாநாத், மணிகண்டன், ராமமூர்த்தி, சிவகுமார், வேலு உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர்.


